

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு களக்காடு நகரில் மெயின் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் திருஉருவ சிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது.நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,சித்திக்,மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,பொதுக்குழு உறுப்பினர் சாந்தி சுபாஷ், களக்காடு நகரச் செயலாளர் மணி சூரியன்,ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்வ கருணாநிதி,ராஜன், சுடலைக்கண்ணு,பேரூர் செயலாளர்கள் அயூப்கான்,ஜான் கென்னடி,அணி அமைப்பாளர் கள் ஜான் ரபீந்தர்,முத்தமிழ் ராஜா,ஏ.ஆர்.ரகுமான்,முருகன், ஒன்றிய துணைச் செயலாளர் தனபால்,அணி துணை அமைப்பாளர்கள் இசக்கி பாண்டியன்,தில்லை ராஜா, ஆகாஷ்,அருள்ராஜ்,டார்வின் சேவியர் ஜார்ஜ்,முகமது அலி ஜின்னா,கல்வி தந்தை ராஜா சண்முகசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### வாழ்நாள் முழுவதும் மக்களின்

# உரிமைகளுக்காக முழங்கியத் தோழர் சீதாராம் யெச்சூரி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 16 -**

**வாழ்நாள் முழுவதும் மக்களின் உரிமைகளுக்காக முழங்கிய தோழர் சீதாராம் யெச்சூரி என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



தன் வாழ்நாள் முழுவதும் மக்களின் உரிமைகளுக்காக முழங்கிய தோழர் Sitaram Yechury அவர்களுக்குப் புகழ்வணக்கம்! செவ்வணக்கம்!

மறைந்த பின்னும் தன்னுடலை மருத்துவ ஆராய்ச்சிக்காக ஒப்படைத்து விட்ட அவரது புகழ் அவரது மக்கள் தொண்டைப் போல் எப்போதும் போற்றப்படும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி தலைமை!

# அரக்கோணம் நகரில் அண்ணா பிறந்த நாள் விழா!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

அரக்கோணம், செப். 16 -

அரக்கோணம் நகரத்தில் பேரறிஞர்அண்ணாஅவர்களின்116வது பிறந்தநாளை யொட்டி முதல்வர் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க. கைத்தறி மற்றும் துணிநூல் துறைஅமைச்சர் - மாவட்ட கழகசெயலாளர்ஆர்.காந்தி வழிகாட்டலின்படி நேற்று சுவால்பேட்டை பிள்ளை யார்கோயில்அருகில்காலை 9:30.மணி அளவில் .பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு

நகரச்செயலாளர்வி.எல். ஜோதி மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி மரியாதை செலுத்தினர்.

இரயில்வேகேட்அருகில் இருந்து ஊர்வலமாக சென்று. அரக்கோணம் நகரத்தில் உள்ள அணைத்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மு.கண்ணையன், என்.ராஜ்குமார் ,லட்சுமி பாரி , துரை சீனிவாசன் , கோ.வ.தமிழ்வாணன் , நந்தாதேவி , எஸ்.ரமேஷ்பாபு ஆர்.கே.லிங்கம் , வி.பாலகிருஷ்ணன், எம்.கே.சிவா, எஸ்.சரவணகுமார் , எஸ். பிரசாத் , எஸ்.பி.மாலின் , ஜி.ஜெனிஸ்குமார் , டி.அந்தோணி , எம்.எம்.வெங்கடேசன் , நிலவுபாபு, ஆனந்தன் , நெப்போலியன் ,

எல்.பஞ்சாட்சரம் , எஸ். செந்தில்குமார், எல்.ரமேஷ் பாபு, டிவி.சதீஸ், எ.சேகர், என்.லோகி, தனஞ்செழியன், எ.கே.பாரி,

ஜெய்சங்கர், எஸ்.வேலு, எல்.எழில், எஸ்.கார்த்தி, வடிவேல்வண்ணன், எஸ்.கமலக் கண்ணன், எ.பி.எம்.சரவணன், அர்ஜுனன் , எ. கதிரவன், ஸ்டாலின், பழனி, ஜான்சன், க.ரக்ஷிதா , கங்காதரன், சிட்டிபாபு , திருமதி.ரசியா மற்றும் வட்ட பிரதிநிதிகள், நகர அமைப் பாளர்கள், துணை அமைப் பாளர்கள் , நகர மகளிர் அணி வழக்கறிஞர் அணி கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி அன்னாரது திருஉருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் மற்றும் வ.வேலுசாமி, ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் மா ஜெயராம், ஒச்சு பாலு, இளைஞர் அணி சௌந்தரராஜன் நெல்பேட்டை பிஸ்மி மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தனித்துவம் மிக்க தத்துவ அறிஞர் தோழர் சீதாராம்!



கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எல்லா முடிவுகளும் கூட்டு முடிவுகளே. ஆனால், சில குறிப்பிட்ட அம்சங்களில் தனிநபர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய வரையறை என்றால் உடனடியாக நினைவுக்கு வருபவர் தோழர் லெனின். முரண்பாடுகளைப் பற்றிய பகுப்பாய்வு என்று சொல்லும் போது உடனடியாக நினைவுக்கு வருபவர் தோழர் மாவோ. உலக கம்யூனிஸ்ட் இயக்கம் ஆனா லும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் ஆனாலும் சரி ஒவ்வொரு கம்யூனிஸ்ட் தலைவரும் ஒரு குறிப்பிட்ட துறையில் தனித்துவமிக்க ஆய்வாளராக, பங்களிப்பு செய்தவராக விளங்கியவர்கள்தான். அதே வேளையில், கட்சியின் இதர கொள்கைகள் மற்றும் நடைமுறையில் அவர்களின் பங்கு இல்லை என்று பொருளாகிவிடாது.

தோழர் சீதாராம் யெச்சூரி என்றதும் கூடவே நினைவுக்கு வருவது அவரது தனித்துவமிக்க பல அம்சங்கள்:

1. சோவியத் யூனியன் வீழ்ச்சி, சோசலிச முகாம் பின்னடைவு, அதையொட்டி தாராளமயக் கொள்கைகள் அமலாக்கம் உலகம் முழுவதும் தீவிரமாக செயல்படத் துவங்கிய காலம். "தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்பதிலி ருந்து யாரும் தப்பித்து விட முடியாது; ஏனெனில் அதற்கு மாற்றே கிடையாது (There Is No Alternative TINA)" என்று முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களும், 'நடுநிலையாளர் களும்' பேசிக் கொண்டிருந்த காலம். கணிச மான இடதுசாரி இளைஞர்கள் மத்தியில் ஒரு குழப்பம் பரவியிருந்த போது தோழர் சீத்தாராம் தனது பேச்சுக்களில் தொடர்ச்சியாக ஒரு கருத் தாக்கத்தை முன்வைத்தார். அது எதிர்வாதம் என்பதாக அல்லாமல் காரண காரியங்களுடனான உறுதியான விளக்கமாக நிறுவப்பட்டது. அது தான், "சோசலிசமே மாற்று (Socialism Is The Alter native SITA)" என்கிற முழக்கம். உலக வரலாறே முட்டுச் சந்தில் நின்றபோது அதை தகர்த்தெறிந்த விளக்கமாக கருத்தாக்கமாக 'TINA' என்பது உண்மையல்ல ; சோசலிசமே மாற்று என்பது திகழ்ந்தது; நம்பிக்கையை விதைத்தது.
2. உலகமய காலத்தில் சோசலிச த்திற்கு எதிர் காலம் உண்டா, சோசலிசம் காலாவதியாகி விட்டதா என்பது போன்ற கேள்விகள் சோச லிசத்தின்பால் அக்கறை உள்ளவர்கள் மத்தியிலும், இடதுசாரி ஆதரவாளர்கள் மத்தியிலும் கூட எழுப்பப் பட்டன. முதலாளித்துவ அறிஞர்கள் இதை உற்சாகமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஃபிரான்சிஸ் ஃபுகுயாமா போன்றவர்கள், 'வரலாற் றின் முடிவு' என்று கொக்கரித்தார்கள். அதாவது, சமூக வளர்ச்சியில் இறுதிக் கட்டம் முதலாளித்துவம் தான்; அதற்குமேல் சோசலிசம், கம்யூனிசம் என்பதெல்லாம் கிடையாது என்று, சோசலிச முகாம் தகர்வை முன்வைத்து கொக்கரித்தார். அந்த காலக்கட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியமான தலைவர்களில் ஒருவரான தோழர் பி.கந்தய்யா நினைவு சொற்பொழிவில் தோழர் சீதாராம் யெச்சூரி ஆற்றிய உரை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த உரையில், சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவிற்கு நான்கு காரணங்களை முன்வைத்தார்.

   1. சோசலிச அமைப்பு முறையில் அரசின் வர்க்கத் தன்மை குறித்து தவறான மதிப்பீடு
   2. சோசலிச ஜனநாயகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள்
   3. சோசலிச பொருளாதாரக் கட்டமைப்பு முறை பற்றியதவறான புரிதல்
   4. தத்துவார்த்த உணர்வு நிலையை அலட்சியப் படுத்தியது

   இவற்றை சாதாரண மனிதரும் புரிந்து கொள்ளும் வகையில் முன்வைத்தார். எதிர்காலம் சோசலிசத்திற்கே; சோசலிசத்தால் மட்டுமே மனித குலம் முழுமைக்கும் சுரண்டலிலிருந்தும், ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலையை அளிக்க முடியும் என்பதை நிறுவுவதில் அவரது பங்களிப்பு மிக முக்கியமானது.
3. இந்தியாவில் 1980க்கு பிறகு அரசியல், மதவெறி மயமாவது தீவிரப்பட்டது, 1992ல் பாபர் மசூதி இடிக்கப் பட்டது. அதன் பிறகு பா.ஜ.க. ஆளும் கட்சியாக மாறியது. இதனால் இந்தியாவில் சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளில் மிகக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. மத வெறி, குறிப்பாக இந்துத்துவாவின் பிற்போக்குத் தனங் களையும் மனிதகுலத்திற்கு அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் முன்வைப்பதில் அவர் கூடுதல் பங்களிப்பை செய்திருக்கிறார். மனுஸ்மிருதியை ஏற்றுக் கொள்வதன் மூலம் இந்துத்துவா எப்படி சாதி ஒடுக்குமுறை, ஆணாதிக்கம், மொழியாதிக்கம், இன ஆதிக்கம் ஆகியவற்றை முன் வைக்கிறது என்பதை மிகத் தெளிவாக, விளக்கமாக நிறுவியிருக் கிறார். மதவெறிக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமின்றி இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகளுக்கும் அவரது உரைகள் வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றன.
4. நவீன தாராளமயக் கொள்கை காலத்தில் உலகமயத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது எப்படி என்பது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீவிரமாக விவாதங்களை முன் னெடுத்தது. 2005 ஆம் ஆண்டு தில்லியில் நடந்த கட்சியின் அகில இந்திய மாநாட்டில்தான், உலகமய மாக்கல், சர்வதேச மூலதனங்கள், பொதுத்துறை, அந்நியக் கடன், சமூகக் கடமைகளை நிறைவேற்று வதிலிருந்து அரசு பின்வாங்குவது, அரசு சாரா அமைப்புகள் பற்றி நமது அணுகுமுறை ஆகியவை விவாதப் பொருளாக முன்வைக்கப்பட்டது. அப்போது, தோழர் சீத்தாராம் யெச்சூரி, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் என்கிற முறையில் மேற்குறிப்பிட்ட விஷயங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை ஆவணத்தை முன்வைத்தார். இந்தியாவில் தொழிலாளி வர்க்கம் இதர பகுதி உழைக்கும் மக்கள் சமூக செயற் பாட்டாளர்கள் நிகழ்காலத்தில் முன்னுக்கு வரும் பிரச்சினைகளின் தன்மையை உள்வாங்கிக் கொண்டு, அதேசமயம் மார்க்சியத்தின் வெளிச்சத் தில் அதை எதிர்கொள்வது எப்படி என்பதற்கு சிறந்த உதாரணம் இந்த ஆவணம். மார்க்சியத்தை ஒரு கம்யூனிஸ்ட், ஒரு சூத்திரம் போல பயன்படுத்தக் கூடாது; மாறாக இயக்கவியல் அணுகுமுறையில் குறிப்பிட்ட காலச் சூழலில் நிலைமைகளுக்கு தகுந்தவாறு மார்க்சியத்தைப் பொருத்துவது எப்படி என்பதற்கான மிகச்சிறந்த வழிகாட்டி இந்த ஆவணம்.
5. இதோடு இணைந்தும், தொடர்ச்சியாகவும் இந்துத்துவா என்பது வெறும் சமூகச் செயல் பாடு மட்டுமல்ல; முதலாளித்துவப் பொருளாதா ரத்திற்கான அரசியல் சமூக செயல்பாடும் ஆகும். அந்த வகையில், இந்துத்துவா என்பது நவீன தாராள மயம் தீவிரமாக அமலாவதற்கான இந்திய அணுகு முறையாக இருக்கிறது. எனவே, மதவெறியும், கார்ப்பரேட் நிறுவனங்களும் இணைந்தே பொதுத் துறை, பொதுச் சொத்துக்கள் ஆகியவற்றை சூறை யாடுகின்றன. உழைக்கும் மக்களின் உரிமைக ளைப் பறிக்கின்றன; ஒடுக்குமுறையை ஏவி விடு கின்றன என்பதை கேட்போர் புரியும்படியும், வாசிப்போர் உணரும்படியும் தெளிவடையச் செய்தவர் தோழர் சீத்தாராம். அவர் தனது உரைகளில் தவறாது பயன்படுத்தும் ஒரு வார்த்தை 'கம்யூனல் கார்ப்பரேட் நெக்சஸ்.' அதாவது, 'மதவெறி பெரு நிறுவன கூட்டு'. இந்தக் கருத்து, அவரது முக்கிய பங்களிப்புகளுள் ஒன்றாகும்.
6. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படை ஆவணமான கட்சித் திட்டம். அதன் முதல் பத்தி யின் கடைசி வாக்கியத்தில், "இந்தியாவில் சோச லிசம் என்பது வர்க்கச் சுரண்டலற்ற, சமூக ஒடுக்கு முறைகளற்ற சமூகம்" என்று அறுதியிட்டு கூறுகிறது. ஆனாலும், பல நேரங்களில் பொருளாதாரப் போராட்டத்தை மட்டுமே பிரதானமாக நடத்துகிறீர்கள் என்ற கருத்து கட்சி மீதான குற்றச்சாட்டாகவும், அவதூறாகவும் சில நேரங்களில் கட்சிக்குள் தவறான புரிதலாகவும் நிலவி வந்த நிலையில், பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் நடத்து வது ஒற்றைக் காலில் நடப்பதற்கு சமம்; சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமும் இணையும் போது தான் பாய்ச்சல் வேகத்தில் செல்ல முடியும் என்று, அவர் மீண்டும் மீண்டும் வலுவான முறை யில் கட்சி அணிகளின் உணர்வாக மாற்றுவதற்கு முயற்சித் தார்; அதில் வெற்றியும் பெற்றார்.

   2004 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநில சிறப்பு மாநாட்டில் தோழர் சீத்தாராம் ஆற்றிய உரை சாதியும் வர்க்கமும் இந்திய சமூகத்தில் பின்னிப்பிணைந்து இருப்பதை யும் கம்யூனிஸ்ட்டுகள் சாதி எதிர்ப்புப் போராட்டத்தை யும், வர்க்கப் போராட்டத்தையும் இணைந்தே எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும், வலுவாக முன் வைத்தது. முன்னதாக, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தின் வெள்ளி விழா மாநாட்டில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரையிலும் "இந்தியாவைப் பொறுத்த வரை வர்க்கத்திற்கு எதிராக சாதி என்று இல்லை. 5000 ஆண்டுகளாக நிலவி வந்த சாதிய அமைப் பிற்குள் இருந்துதான் வர்க்க அமைப்பு உருவானது. எனவே, சுரண்டப்படும் வர்க்கங்கள், ஒடுக்கப்படும் சாதிகள் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. ஒடுக்கப்பட்ட சாதிகளின் போராட்டமும் வலுப்படுத்தப் பட வேண்டிய வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியே. நாடு முன்னேறிச் செல்ல சமூக ஒடுக்கு முறைக்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் எதிரான போராட்டங்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரு விரிவான போராட்டமாக ஒன்றிணைய வேண்டும். இந்த போராட் டங்களை பலப்படுத்தவும் எழுத்தாளர்களின் பங்க ளிப்பை நான் கோருகிறேன்" என மிகச் சுருக்கமாக ஆனால், முழுமையாக தன் கருத்துக்களை முன் வைத்திருக்கிறார். ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் முதல் ஆட்சி யில், தனியார் துறையில் இடஒதுக்கீடு என்பதை, காங்கி ரசை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளச் செய்து குறைந்தபட்ச பொதுத் திட்டத்திலும் அதை ஒரு அம்சமாக கொண்டு வருவதில் தோழர் சீதாராம் யெச்சூரியின் பங்கு முக்கியமானது.
7. கட்சியின் பொதுச் செயலாளர் என்கிற முறையில் மூன்று வேளாண் சட்டத்திற்கு எதிரான போராட் டங்கள்; பல்வேறு அமைப்புகளையும் ஒருங்கி ணைக்கவும்; தொடர்ச்சியான நீண்ட போராட் டத்தை நடத்துவதற்கும் இடையறாது அவரது வழி காட்டுதல் மிகமிக முக்கியமானது. வெளிப்படை யாக அல்லாமல் பல்வேறு கருத்தோட்டங்களையும் அரசியலையும் கொண்ட அமைப்புகளை ஒருங்கி ணைத்து, வெல்லற்கரியவர் என்று ஊதிப்பெரி தாக்கப்பட்ட பிம்பத்துடன் இருந்த மோடியை ஓராண்டுக்கும் அதிகமான காலப் போராட்டத்தின் மூலம் மக்களே மகத்தானவர்கள், போராட்டங்களே ஆயுதம் என்பதை நிறுவியதில் தோழர் சீதாராம் யெச்சூரியின் பங்கு அளப்பரியது.

இப்படி பல வகைகளிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதானமான வழிகாட்டுதல்களில், கருத் தாக்கங்களில் தோழர் சீதாராம் யெச்சூரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புகளின் ஊடாக செயல்பாடுகளின் வழியாக என்றென்றும் நீங்காமல் நிறைந்திருப்பார்.



**க.கனகராஜ்**
மாநில செயற்குழு உறுப்பினர்
மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி

நன்றி: **தீக்கதிர்**
14.9.2024